# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2042 (பங்குனி-சித்திரை) ஏப்ரல் 2012 ஏர்-27, உழவு-04, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
பரணி கே.பாலசுப்பிரமணி
"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744
செல் : 9381545452

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"தீரன் சின்னமலை மாளிகை"
72, பீட்டர்ஸ் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351744
Cell : 93815 45451

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
Fax : 044-28351244

| | |
|---|---|
| தலைவர் | : பரணி கே.பாலசுப்பிரமணி |
| துணைத்தலைவர்கள் | : கே.ஏ.கணபதி<br>பி.சென்னியப்பன் |
| செயலாளர் | : ஆர். செல்வராஜ் |
| இணைச்செயலாளர்கள் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>Dr.கே.ஆர்.பி.சண்முகம் |
| பொருளாளர் | : கே.கே. ரமேஷ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| கே.ராஜாமணி | பி.அருள் |
| வி.பி.செங்கோட்டுவேல் | எம்.எஸ்.சங்மேஸ்வரன் |
| பி.கே.ஈஸ்வரமூர்த்தி | வீ.ஆர்.பாலசுப்பிரமணியன் |
| ஆர். சண்முகவேல் | எம்.அமராபதி |
| எம். கார்த்திக் | எஸ்.அன்பழகன் |
| வி.பி.வீரப்பன் | சி.சர்வராஜன் |
| ஆர்.இளங்கோ | எம்.எஸ்.ராஜேந்திரன் |
| பி.ரவி | கே.என்.தர்மராஜ் |
| Dr.டி.எஸ்.செல்வராஜ் | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| எஸ்.சிவசாமி | உத்தமிபொன்னுசாமி |

## இந்த இதழில்

| | |
|---|---|
| பொருளடக்கம் | - 1 |
| தலையங்கம் | - 2 |
| தானே புயல் | - 3 |
| வேண்டுகோள் | – 4 |
| அடையாள அட்டை விண்ணப்பம் | – 5 |
| கட்டிட நிதி | - 6 |
| என்றும் நலமுடன் வாழ | - 7 |
| வாழ்த்துகிறோம் | - 10 |
| திருவிளையாடல் | - 11 |
| திருமண சடங்குகள் | - 14 |
| ஆன்மீகம் | - 17 |
| மூச்சுக்காற்று | - 18 |
| மாணவர்களின் கவனத்திற்கு.. | - 21 |
| மணமகன் தேவை | - 22 |
| மணமகள் தேவை | - 24 |
| மணமகன் தேவை | - 25 |
| மணமகள் தேவை | - 28 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பு சொந்தங்களுக்கு, வணக்கம்.



வணக்கம், நமது சங்கம் திரட்டும் தானே புயல் நிவராண நிதிக்கு இதுவரை வாரி வழங்கியுள்ள சொந்தங்கள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விரைவில் இத்தொகை தமிழக முதல்வர் நிவாரண நிதிக்கு அளிக்கப்பட உள்ளதால், புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட விழைபவர்கள் உடனடியாகச் செயல்பட்டு, தாங்கள் அனுப்ப விரும்பும் தொகையை சங்கத்திற்கு அனுப்புமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ஆரம்பித்து 50 ஆண்டுகள் நிறைவு செய்துள்ளது. கொங்குச் சமுதாய வரலாற்றில் இது ஒரு பெருஞ்சாதனையென்றால் அது மிகையாகாது. அனைத்து கொங்குச் சமுதாய அமைப்புகளுக்கும், தாயகமாகத் திகழும் நமது சங்கம் அரசியல் சார்பற்றது. சமுதாயப் பணியாற்றுவதில் வியத்தகு சாதனைகள் புரிந்துள்ளது. சங்கத்தின் 50 ஆண்டுகால நீண்ட நெடிய பயணத்தின் மைல்கல்லாக அமையவிருப்பதுதான் 02-09-2012 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை சென்னை காமராஜர் அரங்கத்தில் நடைபெற உள்ள ஆண்டு குடும்ப விழா. 50 வது ஆண்டு நிறைவு விழாவைச் சங்கம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டுள்ளது. 50 ஆண்டுகாலத்தில் சங்கத்திற்காகப் பாடுபட்ட நிர்வாகிகள் அனைவரும் பாராட்டப்பட உள்ளனர். உறுப்பினர்கள் அனைவரும் குடும்பத்துடன் விழாவில் தவறாது கலந்துகொள்வதற்கு ஏதுவாக தேதியைக் குறித்து வைத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளையர்களை நாட்டைவிட்டே ஓட்ட வேண்டுமெனக் கொதித்தெழுந்து மூன்று போர்களில் வெற்றி கொண்டவரும், கொங்குநாட்டின் முதல் சுதந்திரப் போராளியுமான கொங்கு மாவீரன் தீரன் சின்னமலையின் 257ஆவது பிறந்த நாளான ஏப்ரல் மாதம் பதினேழாம் தேதி செவ்வாய்க்கிழமை சென்னை கிண்டியில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு சங்கத்தின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட உள்ளது. இந்த நிகழ்ச்சியில் மத்திய மற்றும் மாநில அமைச்சர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

எனவே சங்க உறுப்பினர்கள் அனைவரும் குடும்பத்துடன் 17-4-2012 அன்று காலை 8.00 மணிக்கு தீரன் சின்னமலை சிலையருகில் திரண்டிடுமாறு அன்புடன் கேட்டுக்ளொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

பரணி கே. பாலசுப்பிரமணி
தலைவர்

❖❖❖❖❖

## 'தானே' புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக் கரம் நீட்டுவோம்



நீங்கள் அனுப்பும் காசோலை அல்லது வரைவோலையில்
Kongu Nanbargal Sangam
(கொங்கு நண்பர்கள் சங்கம்)
என்று குறிப்பிட்டு, தொகையை எழுதி அத்துடன் இந்தக் கூப்பனையும் நிரப்பி அனுப்பவும் :

பெயர் : ..........................................................................................

முகவரி : ..........................................................................................

..........................................................................................

காசோலை / வரைவோலை எண். : ..........................................தேதி : ............................

தொகை : ..........................................................................................

தொடர்பு எண். : ..........................................................................................

குறிப்பு : ❖ நன்கொடை வழங்குபவர்களுக்கு 80G சான்றிதழ் வழங்கப்படும்.
❖ வரைவோலை சென்னையில் மாற்றத்தக்க வகையில் இருக்கவேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி :–**
தானே புயல் நிவாரண நிதி

## கொங்கு நண்பர்கள் சங்கம்

'வெள்ளி விழா இல்லம்' எண்.34, சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014. போன் : 044-2835 1244 / 2744

## உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் புதியதாக அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று ஏற்கனவே செய்தி மடல் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது. செய்தி மடலில் வெளியிடப்பட்டுள்ள அடையாள அட்டை மாதிரி விண்ணப்பத்தில் தேவையான தகவல்களைப் பூர்த்தி செய்து, இதுவரை சங்கத்திற்கு அனுப்பாதவர்கள், உடனே அனுப்பும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சங்கத்தின் தேர்தல்களில் வாக்களிப்பதற்கும், சங்கம் அளித்து வரும் சலுகைகளைப் பெறுவதற்கும் புதியதாக வழங்கப்படவுள்ள அடையாள அட்டை அவசியம் தேவைப்படும். எனவே இதுவரை விண்ணப்பத்தை அனுப்பாத உறுப்பினர்கள் உடனே அனுப்பும்படி வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

‘தீரன் சின்னமலை மாளிகை’ கட்டிட நிதிக்கு இதுவரை ரூ. 1000/– அனுப்பாத சங்க உறுப்பினர்கள், உடனே அனுப்பிட அன்புடன் வேண்டுகிறோம். ரூ.1000/– அனுப்பாத சங்க உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் என்பதால், கட்டிட நிதியை உடனே சங்கத்திற்கு அனுப்புமாறு வலியுறுத்திக் கேட்டுகொள்கிறோம்.

❖❖❖❖❖

## சங்கச் செய்தி

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் இணையதள முகவரி மாற்றப்பட்டுள்ளது.

www.kongunanbargalsangam.com

உறுப்பினர்கள் இனிமேல் புதிய இணையதளத்தைப் பயன்படுத்தி சங்கச் செய்திகளை அறிந்துகொள்ள வேண்டுமென அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பரணி **கே. பாலசுப்பிரமணி**
தலைவர்

**ஆர். செல்வராஜ்**
செயலாளர்

❖❖❖❖❖

அடையாள அட்டை விண்ணப்பம்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

**வெள்ளி விழா இல்லம்**

நெ.34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

Membership No. / உறுப்பினர் எண் :

Name / பெயர் :

Father's Name / தகப்பனார் பெயர் :

Date of Birth / பிறந்த தேதி :

Edu. Qualification / கல்வித்தகுதி :

Occupation / தொழில் :

Koottam & Kula Deivam
கூட்டம் & குல தெய்வம் :

Photo

| Native Address<br>சொந்த ஊர் முகவரி | Present Address<br>தற்போதைய முகவரி | Office Address<br>அலுவலக முகவரி |
|---|---|---|
| Ph : | Ph : | Ph : |

Cell Number: E-mail ID :

Family Details / குடும்ப விவரம்

| Name<br>உறுப்பினர் பெயர் | Date of Birth<br>பிறந்த தேதி | Relationship<br>உறவுமுறை | Education / Employment<br>படிப்பு / தொழில் | Blood Group<br>இரத்தப் பிரிவு | Land Line / Mobile<br>தொலைபேசி/கைபேசி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

குறிப்பு : தங்களைப் பற்றி மேலும் விபரங்களைத் தெரிவிக்க
விரும்பினால் அவற்றை இத்துடன் இணைத்து அனுப்பவும்.

Signature
கையொப்பம்

# கொங்கு நண்பர்கள் சங்கம்


கட்டிட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 70,94,336 |
| 1548 | 8 | N.M.குமரசாமி | 10,000 |
| 1549 | 1520 | திருமதி நிர்மலா பெரியசாமி | 5,000 |
| 1550 | 80 | S.நாச்சியப்பன் | 5,000 |
| 1551 | | E.அசோகன் | 2,000 |
| 1552 | 2820 | Dr.N.சிவானந்தன் | 2,000 |
| 1553 | 2679 | S.ராமலிங்கம் | 1,000 |
| 1554 | 0252 | K.M.சுப்ரமணியன் | 1,000 |
| 1555 | | K.தங்கவேல் | 1,000 |
| 1556 | | A.கணேசன் | 1,000 |
| 1557 | | T.ராஜேந்திரன் | 1,000 |
| 1558 | | செல்வி P.திவ்யா | 1,000 |
| 1559 | | K.பழனிசாமி | 1,000 |
| 1560 | | P.சதாசிவம் | 1,000 |
| 1561 | | K.நல்லதம்பி | 1,000 |
| 1562 | | T.செந்தில்குமார் | 1,000 |
| 1563 | | C.ராமலிங்கம் | 1,000 |
| 1564 | | P.செவ்ம் | 1,000 |
| 1565 | | K.ரமேஷ் | 1,000 |
| 1566 | 0211 | D.சண்முகம் | 1,000 |
| 1567 | 0198 | P.ஜெகதீஸ் | 1,000 |
| 1568 | | ஸ்ரீஹரிஹரன் சுதன் | 1,000 |
| 1569 | 1919 | P.தங்கவேல் | 1,000 |
| 1570 | 3044 | C.சந்திரன் | 1,000 |
| 1571 | | P.ராகுல் ராஜ் | 1,000 |
| 1572 | 837 | N.ராமசாமி | 1,000 |
| 1573 | | செல்வி B.காவ்யா | 1,000 |
| 1574 | 2183 | A.செங்கோடன் | 1,000 |
| 1575 | 1347 | Dr.நெல்லையப்பன் | 1,000 |
| 1576 | | Dr.L.ப்ரியா | 1,000 |
| 1577 | | C.செந்தில்குமார் | 1,000 |
| 1578 | | R.சக்திவேல் | 1,000 |
| 1579 | | R.லோகநாதன் | 1,000 |
| 1580 | | L.பழனிசாமி | 1,000 |
| | | | 71,46,336 |

# என்றும் நலமுடன் வாழ

## அறுபதிலும் ஆசை வரும் !

பத்மஸ்ரீ Dr.வி.எஸ்.நடராசன்
முதியோர் மருத்துவர்



வயதான காலத்தில் பாலுணர்வு குறையக் காரணம் என்ன ? அதற்குத் தக்க சிகிச்சை உண்டா? என்றெல்லாம் பலர் கேட்கத் தொடங்கிவிட்டார்கள். அதற்கான பதிலைத் தெரிந்து கொண்டால், உங்களுக்கும் அது பயனுள்ளதாக இருக்கும்.

ஒருவரின் இளமைக்கும், நீண்டகாலம் வாழ்வதற்கும் அவருடைய இளம் மனைவிதான் காரணம் என்ற கருத்து நிலவுகிறதே... அதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

முதுமையில் பாலுணர்வு பற்றி நம் நாட்டினர் அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆகையால், அதைப் பற்றிய ஆராய்ச்சிகள் எதுவும் நடத்தப்படவில்லை. ஆராய்ச்சியாளர்கள் இத்துறையிலும் தம் கவனத்தைச் செலுத்துவது அவசியமாகும்.

ரஷ்யாவில் பாலுணர்வு பற்றிய ஆராய்ச்சி ஒன்றினை நடத்தினர். எலிகளை 'அ' வகுப்பு, 'ஆ' வகுப்பு என இரண்டு வகுப்பாகப் பிரித்தனர். அ வகுப்பு எலிகளைத் தனியே வைத்து இனச் சேர்க்கையின்றி வாழ வைத்தனர். ஆ வகுப்பு எலிகளை இனச் சேர்க்கையோடு வாழ வைத்தனர். சில மாதங்களில் இனச் சேர்க்கையின்றி தனித்து வாழ்ந்த அ வகுப்பு எலிகள், உடல்நலம் குன்றி விரைவில் இறந்து விட்டன. இனச் சேர்க்கையோடு வாழ்ந்த ஆ வகுப்பு எலிகள் உடல்நலம் குன்றாமல் நெடுநாட்கள் வாழ்ந்தன.

இதனால் பாலுணர்வு உடலுக்குக் கெடுதல் செய்வதில்லை என்பது உறுதியாகத் தெரிகிறது.

**முதுமையில் பாலுணர்வு குறைவதற்கு நோய்கள் ஒரு காரணமா ?**

முதுமை பல நோய்களின் மேய்ச்சல் காடு ஆகையால் 70% முதியவர்களுக்கு பாலுணர்வு குறைவதற்கு நோய்களே ஒரு முக்கியக் காரணமாகும். ஆண்களின் வீரியத்தன்மை குறைவதற்கு நீரிழிவு நோய் ஒரு முக்கியக் காரணமாகும். மாரடைப்பு நோய் உள்ளவர்கள் சுமார் 3 மாதங்களுக்கு செக்ஸ் வைத்துக்கொள்ள வேண்டாமென்று டாக்டர்கள் கூறுவார்கள். அதன் பிறகு டாக்டரின் ஆலோசனையின்படி செக்ஸை

தொடரலாம். இருதயம் பலவீனமானவர்களுக்கும் (Heart Failure) பாலுணர்வு குறையும். அதற்குக் தக்க சிகிச்சை தர வாய்ப்புண்டு. உயர் இரத்த அழுத்தமுள்ளவர்கள் வழக்கம்போல் தாம்பத்ய உறவு வைத்துக்கொள்ளலாம். ஆனால், இரத்த அழுத்தத்தைக் குறைக்க கொடுக்கும் மாத்திரைகளினால் பாலுணர்வு குறையலாம்.

பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாலுணர்வு குறையாது. ஆனால், அதைச் செயல்படுத்துவதில் சிரமம் ஏற்பட வாய்ப்புண்டு. தைராய்டு சுரப்பி குறைவாகச் சுரந்தால் பாலுணர்வு குறையும். மூட்டு வலிகளினாலும் செக்ஸை செயல்படுத்த முடியாத நிலை ஏற்படலாம். மற்றும் ஆஸ்துமா, உடற்பருமன் போன்ற தொல்லைகளினால் பாலுணர்வு சரியாக இருந்தும், அதனைச் செயலாற்ற முடியாத நிலை ஏற்படும்.

ஆண்/பெண் இன உறுப்புகளில் செய்து கொண்ட அறுவை சிகிச்சை மூலமும் பாலுணர்வு குறைய வாய்ப்புண்டு (உ.ம்.)கர்ப்பப்பை அறுவை சிகிச்சை, மார்பக அறுவை சிகிச்சை, பிராஸ்டேட் சுரப்பி அறுவை சிகிச்சை. மேலும் மனச்சோர்வினாலும் (Depression) பாலுணர்வு மிகுந்த அளவில் குறையும்.

**மருந்து உட்கொள்வதால் பாலுணர்வு குறையுமா ?**

முதுமையில் பல நோய்களுக்குப் பல மருந்துகள் உண்டு. அந்த மருந்துகளினாலும் பாலுணர்வு குறைய வாய்ப்புண்டு.

மனநோய்களுக்குக் கொடுக்கும் மருந்து, விறைப்புத் தன்மையையும், விந்துவை வெளியேற்றும் சக்தியையும் வெகுவாகக் குறைக்கும். மற்றும் உயர் இரத்த அழுத்தத்திற்குக் கொடுக்கும் மருந்து, இருதய நோய்க்குக் கொடுக்கும் மருந்து இவற்றினாலும் பாலுணர்வு குறையும்.

மதுவை அளவுக்கு அதிகமாக அருந்துவதால் பாலுணர்வு குறைய வாய்ப்புண்டு (80%). மதுவை நிறுத்திவிடுவதன் மூலம், பாலுணர்வு பழைய நிலைக்கு வர வாய்ப்புண்டு.

**முதுமையில் பாலுணர்வு குறைகிறது. இதற்கென்று சிறப்பு வைத்தியம் ஏதேனும் உண்டா ?**

முதுமையில் பாலுணர்வு குறைவதற்கு பல நோய்களும் அதற்குக் கொடுக்கும் மருந்துகளுமே காரணமாகின்றன. ஆகையால், அந்நோய்களுக்கு (உ.ம். நீரிழிவு நோய்) தக்க சிகிச்சை அளித்தாலே பாலுணர்வு பழைய நிலைக்கு வர வாய்ப்புண்டு. இதைப்போலவே நோய்களுக்குக் கொடுக்கும் மாத்திரைகளையும் (உ.ம். உயர்ரத்த அழுத்தத்திற்குக் கொடுக்கும் மாத்திரை) குறைத்தோ அல்லது மாற்றியோ கொடுத்தால் பாலுணர்வு சரியாகிவிடும். பாலுணர்வு குறைய முதுமையில் மன அழுத்தம் ஒரு முக்கியமான

காரணமாகும். அதைத் கண்டறிந்து அதற்குத் தக்க சிகிச்சை அளித்தால் செக்ஸ் உணர்வு சரியாகிவிடும்.

**பாலுணர்வு அதிகப்படுத்துவதற்கென்றே ஏதாவது மாத்திரைகள் உண்டா ?**

உண்டு. முக்கியமாக ஆண்களுக்கு விறைப்புத் தன்மையை அதிகரிக்க Sildenafil என்கிற மாத்திரையை உபயோகிக்கலாம். இந்த மாத்திரை உடலுறவு கொள்வதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் இந்த மாத்திரையை உபயோகப்படுத்துவதற்குமுன், அவர்களின் உடல்நிலையை முழுமையாக பரிசோதனை செய்த பின்னரே இம்மாத்திரையைச் சாப்பிடுபவர்கள் சிபாரிசு செய்ய வேண்டும். இருதய நோயாளிகள் முக்கியமாக Nitrate மாத்திரையைச் சாப்பிடுபவர்கள் இந்தச் செக்ஸ் மாத்திரையை அறவே தவிர்க்க வேண்டும். இந்த செக்ஸ் மாத்திரையினால், குறைந்த ரத்த அழுத்தம், தலைவலி மற்றும் வயிற்றுக் கோளாறுகள் போன்ற தொல்லைகள் வர வாய்ப்புண்டு.

**பாலுணர்வைப் பற்றி வேறு ஏதாவது செய்திகள் உண்டா ?**

நிறைய ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. சமீபத்தில் நான் படித்த மருத்துவ இதழிலிருந்து சில செய்திகளை இங்கு குறிப்பிடுகிறேன். இவை எனது கருத்துகள் அல்ல என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன்.

- இது ஒரு சிறந்த உடற்பயிற்சியாகும். உடலில் உள்ள எல்லா திசுக்களுக்கும் ஆக்ஸிஜன் கிடைக்க உதவுகிறது.
- வாரத்தில் மூன்று முறை உடலுறவு வைத்துக்கொள்வது 120 கிலோ மீட்டர் ஜாகிங் (Jagging) செய்வதற்குச் சமமானதாகும்.
- நல்ல மற்றும் கெட்ட கொலஸ்ட்ரால் அளவைச் சம நிலைப்படுத்துகிறது.
- உடலுறவிற்குப் பின்பு உடல் புத்துணர்ச்சியும், மனம் மிக்க அமைதியும் அடைகிறது.
- பார்ட்னர்களுக்கிடையே மிகுந்த நெருக்கத்தை ஏற்படுத்துகிறது.
- தூக்கமின்மை, தலைவலி, மனச்சோர்வு மற்றும் தற்கொலை முயற்சி போன்றவைகளை மிகவாகக் குறைக்கிறது.


**பாலுணர்வினைப்பற்றி உங்களின் முடிவான கருத்து என்ன ?**

முதுமையில் பாலுணர்வினை விரும்பி அதனைக் கடைப்பிடிப்பவர் நன்மையே அடைவர். Sexuality for the aged is a good thing, for those who want it.

- தொடரும்....

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்



தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் அவர்களின் பேரனும், நா.புஷ்பராஜ் - மணிமேகலை தம்பதியரின் மகனுமான செல்வன் கிருபா புஷ்பராஜ் அமெரிக்க நாட்டின் கலிபோர்னியா மாகாணத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான Super Lawyer - Rising Star என்ற உயரிய விருதினைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இந்த விருதை இரண்டாவது முறையாகப் பெறுகிறார் என்பதும், இந்த விருதைப் பெறும் முதல் தமிழன் என்பதும் குறிப்பிடத்தக்கது. பொறியியல் துறையில் M.S. (USA) பட்டமும், சட்டத்துறையில் J.D. (Judicial Doctorate) USA, பட்டமும் பெற்றுள்ள இவர் அமெரிக்காவில் புகழ்பெற்ற நிறுவனங்களில் ஒன்றான 'அமேஜான்' நிறுவனத்தில் காப்புரிமை சட்டவல்லுநராகப் (Intelluctual Property Attorney) பணியாற்றி வருகிறார்.

Silicon Valley Intelluctual Property Lawyers Association என்ற அமைப்பின் பொருளாளராகவும், சாக்ரோ மேண்ட்டோ மெக்ஜார்ஜ் சட்டப் பல்கலைக்கழகத்தில் பகுதிநேரப் பேராசிரியராகவும் பணிபுரிகிறார். 31 வயதில் இப்பொறுப்புகளுக்கு வந்துள்ளது ஒரு பெருஞ்சாதனையாகக் கருதப்படுகிறது. இவருடைய சட்ட மாணவர்கள் பலர் இவரைவிட மூத்தவராக இருக்கின்றனர்.

கடந்த ஆண்டு, கலைஞர் தொலைக்காட்சியில் 'சந்தித்த வேளையில்' நிகழ்ச்சியில் இவர் காப்புரிமை சட்டம் பற்றியும், அமெரிக்க சட்டங்கள் பற்றியும், அமெரிக்க வாழ்க்கை பற்றியும் அளித்த ஒரு மணி நேரப்பேட்டி திரு. கிருஷ்ணராஜ் வாணவராயர், திரு.இரா.காந்தி, திராவிடக் கழகத் தலைவர் திரு.கே.வீரமணி, திரு. இரா.தமிழ்மணி, மறைமலை இயக்குவனார் முதலான சான்றோர்களின் பாராட்டைப் பெற்றது.

தமிழில் ஆர்வமும், புலமையும், கொண்ட இவர் அங்கு மாணவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் தமிழ் கற்றுக்கொடுத்தார். இவர் பணியாற்றிய சீமென்ஸ், இண்ட்டல், பெர்க்கின்ஸ்காய் ஆகிய நிறுவனங்களில் சிறந்த சேவை புரிந்ததற்காக விருதுகள் பல பெற்றுள்ளார்.

2012 ஆம் ஆண்டிற்கான Super Lawyer-Rising Star விருதைப் பெற்று, தமிழ்நாட்டிற்கும், கொங்குச் சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்துள்ள திரு.கிருபா புஷ்பராஜ் அவர்களைச் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பாராட்டுவதுடன் மேலும் பல சாதனைகள் புரிய வாழ்த்துகிறது.

❖❖❖❖❖

## திருமணங்களில் திருவிளையாடல்கள்

திரு.செ.நல்லசாமி

சென்ற இதழ் தொடர்ச்சி...

பட்டுப்புடவையை உடுத்திக் கொண்டவளைக் கல்யாணத்திற்கு அழைத்துச் சென்றால் அவள் அதை அவிழ்த்து எறிவதற்குள் காட்டும் அவசரமும், அழைத்துச் சென்றவரைப் படுத்தும்பாடும் கொஞ்ச நஞ்சமல்ல. அது குத்துதா? கொடையுதா? என்றும் தெரியவில்லை !

திருமண வீட்டில் வேலை செய்வதைக் கேவலமாவும், தரக்குறைவாகவும், தங்களது கௌரவத்திற்கு இழுக்காகவும் உறவினர்களும், நண்பர்களும் நினைக்கிறார்கள். இவர்கள் திருமணங்களுக்கு வரும் திருக்கழுக்குன்றத்துக் கழுகுகளே! வந்த இவர்கள் வயிறார உண்டுவிட்டு, செத்தையை அரித்துப் போடாமல் போனாலே போதும் என்பதே மணவீட்டாரின் எதிர்பார்ப்பு.

ஒவ்வொருவரும் ஒரு முகூர்த்த நாளில் பல திருமணங்களுக்குச் செல்ல வேண்டியதாக இருக்கும். இதற்காகவே இன்று கிராம மக்கள் காயலான் கடைக்குப் போக வேண்டிய பழைய கார்களைக் காப்பாற்றிக் கட்டுத்தரையில் நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். முகூர்த்த நாளில் இவற்றில் ஏறி, திருமண மண்டபம் மண்டபமாகச் சென்று வருகின்றனர். வீடியோவிற்கு முகம் காட்டிவிட்டு வேகமாகத் திரும்பும் காட்சியையே எங்கும் காண முடிகிறது. முகூர்த்த நாட்களில் நகர்ப்புறச் சாலைகளில் போக வர முடியாத அளவுக்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதும், அதில் சிக்கி அவதிப்படுவதும், விடுபடுவதும் தொடர்நிகழ்வாகி விட்டது.

இக்காலத்தில் திருமணங்களை வாடகைப் பொருட்களைக் கொண்டு நடத்துவது என்பது வாடிக்கையாகி விட்டது. மண்டபம், பாத்திரங்கள், பண்டங்கள், இருக்கைகள் எல்லாமே வாடகைக்குக் கிடைக்கின்றன. மொத்தத்தில் பெண் வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாரும் கைகளை வீசிக் கொண்டு கல்யாணத்திற்கு வரலாம். திருமணத்திற்குத் தேவையான எல்லாவற்றையும் ஒப்பந்தக்காரர்களே கவனித்துக்கொள்கிறார்கள். இதற்கு A to Z என்று பெயர் வைத்துள்ளனர். வாழை மரம் கட்டுவதிலிருந்து, வந்தவர்களுக்குக் காப்பி கொடுத்து வரவேற்பது வரை, அட்சதை அரிசி முதல் அழகிய மணவறை வரை எதைப்பற்றியும் கல்யாண வீட்டார் கவலைப்பட வேண்டாம். தேனிலவு, சாந்தி முகூர்த்தம் முடிய முகவர்களாக இருந்து முடித்துத் தந்து விடுகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் இவர்கள் கல்யாண வீட்டாரின் நகல்கள். திருமண மண்டபத்தில் கூடும் கூட்டத்தில் பாதிப்பேர் இவர்களாகவே இருப்பார்கள். எரிபொருளைப்போட்டால் இயங்கும் இயந்திரம் போலாகி விட்டது, இன்றைய மனித வாழ்க்கை. இதில் பொம்மலாட்டப் பொம்மைகளே

மனிதர்கள். இன்று பணம் ஒன்றே பிரதானம் என்றாகிப் போனது.

இதைப் பார்த்து அரசியல்வாதிகளும் தங்களது போக்கை மாற்றிக்கொண்டு உள்ளனர் போலும். கட்சிக் கொடி கட்டுவதிலிருந்து கள்ள ஓட்டுப்போடுவது வரை, உறுப்பினர் சேர்ப்பது முதல் நாற்காலியில் உட்கார வைப்பது வரை காண்ட்ராக்ட் விடுவது அரசியல் கட்சிகளின் நடைமுறையாகி விட்டது. கொடிகளைக் கட்டி, போஸ்டர்களை ஒட்டி, கூட்டம் கூட்டிய தொண்டர்கள் போன இடம் தெரியவில்லை. தொண்டர்களின் இடத்தை இன்று குண்டர்கள் பிடித்துக்கொண்டனர். திருமணத்திற்கும் தேர்தலுக்கும் பணம் ஒன்று மட்டும் இருந்தால் போதும், மற்றவை தாமாகவே வந்து விடும் என்ற போக்கு எல்லாவற்றிலும் வந்து விட்டது. இந்த விபரீதப் போக்கு வீட்டையும் கெடுக்கும், நாட்டையும் அழிக்கும்.

'அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு'

என்பது வள்ளுவரின் வாக்கு. இதில் முதல் வரியைக் கோட்டை விட்டுவிட்ட இந்தச் சமுதாயம் இரண்டாவது வரியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது. விடாப் பிடியாக இந்தக் குறளின் இரண்டாவது வரியின் அடிப்படையிலேயே அரசியலும் திருமணமும் ஆக்கப்பட்டுவிட்டன. ஒட்டு மொத்த வாழ்க்கையும் மாற்றப்பட்டு விட்டது. இதுவா வள்ளுவர் வழி?

'திருமணம் எளிமையாக இருக்க வேண்டும். ஆடம்பரமும், ஆர்ப்பாட்டமும், ஆரவாரமும், அநாவசியச் செலவுகளும் கூடாது. அளவாக அழைக்கப்பட வேண்டும். அவரவர் இல்லங்களிலும், இருப்பிடங்களிலும் நடைபெற வேண்டும். நகரங்களை நாடிச்செல்வது நல்லது அன்று. விடிய விடிய விழித்திருந்து காரணம் தெரியாமலே திருமணச் சீர்களைச் செய்யக் கூடாது.

இவற்றைப் பொதுவாக எல்லோரும் சொல் அளவில் ஆதரிக்கின்றோம். பரவலாகப் பேசுகின்றோம். ஆனால், நம்மால் நடைமுறைப்படுத்த முடிவது இல்லை. இதற்குக் காரணங்கள் எவை?

1. நம்முடைய நண்பர்கள், உறவினர்கள் அழைப்பை ஏற்று அவர்களுடைய திருமணங்களுக்குச் சென்றிருக்கின்றோம். விருந்து உண்டிருக்கின்றோம். ஆகவே, அவர்களை அழைத்தே ஆக வேண்டும் என்ற கட்டாயம் முதல் காரணம்.

2. திருமணங்களுக்கு வரும் கூட்டமே குடும்பத்தின் செல்வாக்கையும் செழிப்பையும், சிறப்பையும் எடுத்துக்காட்டுகிறது என்ற நிலை இந்தச் சமுதாயத்தில் இருக்கும் போது நாம் மட்டும் விலகி நிற்கமுடியாதது இரண்டாவது காரணம்.

3. எளிமையாக நடத்தும் எண்ணம் இருந்தாலும் குடும்பத்தில் உள்ள மற்றவர்கள் இதற்கு உடன்பட மறுப்பது மூன்றாவது காரணம்.

4. இதைச் சுற்றமும் நட்பும் ஆதரிக்காதது நான்காவது காரணம்.

5. ஏளனமாகப் பேசுமே இந்தச் சமுதாயம், எளிமையும், சிக்கனமும் “கஞ்சன்” என்ற பட்டத்தை அளித்திடுமே என்று அஞ்சுவது ஐந்தாவது காரணம்.

6. மணமகன் அல்லது மணமகள் ஆகிய இரு தரப்பில் ஏதாவது ஒரு தரப்பு முட்டுக்கட்டை போடுவது ஆறாவது காரணம்.

7. “எவ்வ(து) உறைவது உலகம் உலகதோடு

அவ்வ(து) உறைவது அறிவு” - குறள் **426**

என்ற குறளை மேற்கோள் காட்டி நமக்குச் சாதமாக ஆக்கிச் செம்மறி ஆட்டு மந்தையில் நாமும் சேர்ந்து கொள்வது செக்கு மாட்டுச் சிந்தனையில் சுழல்வதும் ஏழாவது காரணம்.

8. வைத்த மொய்களையும் வழங்கிய பரிசுப் பொருட்களையும் வசூல் செய்யும் வாய்ப்பை இழக்காமல் இருக்க நினைப்பது எட்டாவது காரணம்.

இப்படியே காரணங்களைக் காட்டிக்கொண்டே போய்க் கடைசியில் புலிவாலைப் பிடித்த கதையாக ஆடம்பரத்தையும், செலவையும், கூட்டத்தையும் குறைக்க முடியாத நிலையில் உள்ளோம். **இதை எழுதும் ஆசிரியனும் இதற்கு விதிவிலக்கு அல்ல.**

திருமணம் என்ற பெயரில் திரு (செல்வ) விளையாடல்களை நடத்துவது அதர்மமானது. அநாகரிகமானது, அர்த்தமற்றது.

இதை மனசாட்சி ஏற்றுக்கொள்கிறது. இருந்தாலும் மனித நடைமுறை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. எல்லாவற்றையும் ஏற்று நடைமுறைப்படுத்த முடியாது என்றாலும் இயன்ற வரை கடைப்பிடிப்போம்.

**எளிமையே என்றும் வலிமை** !

முடிந்தது.

❖❖❖❖❖

# கொங்கு வேளாளர் தற்போதைய திருமணச் சடங்குகள்

முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்

### முகூர்த்த நாள் நிகழ்ச்சி

### நாட்டுக்கல் வழிபாடு

மணமகன் மேள தாளங்கள் முழங்க நாட்டார்கல் இருக்குமிடம் சென்று அதனை வலம் வந்து வணங்கி மரியாதை செய்து வெற்றிலை பாக்குள்ள சுருளைக் கட்டிவிடுகின்றனர்.

தன் முன்னோரை – இனத்தில் பெரியவர்களை - வீர தீரச் செயல்களால் குடியைக் காத்து ஓம்பியவரை நினைத்து, போற்றி வழிபட்டே, குடிவளர்ச்சிக்கு அடிப்படையான திருமணத்தைச் செய்ய முற்படுகின்றனர் என்பதை இச்சடங்கால் அறிகிறோம்.

புதிதாக வாழ்க்கையைத் தொடங்க இருக்கும் மணமகன், தான் இந்நிலை எய்துவதற்குக் காரணமாய் இருந்த தன் முன்னோரை, தன் வழி மரபினரை மதித்துப் போற்றுவதாகவும் இந்நிகழ்ச்சி அமைகிறது. திருமண மணவறைக்கு மணமக்கள் செல்வதன் முன்னர், முன்னோர்களை வணங்கியதும் நேரே மணமேடைக்குச் செல்லும் முறையில் நடத்தப்படுகிறது.

### கங்கணம் கட்டுதல்

திருமணப் பந்தலில், மஞ்சள் தூளில் சிறிது தண்ணீர் விட்டுப் பிசைந்து ஒரு கைவிரல் பிடியாகக் கூம்பு வடிவத்தில் செய்து வைத்து அதன் மீது சில அறுகம்புல்லைக் குத்தி வைப்பர். இவ்வடிவத்தையே கணபதி என்று கொள்வர். கணுவில்லாத விரலி மஞ்சளை அருமைக்காரர் எடுத்து அதனை மஞ்சள் தோய்த்த நூலில் கட்டி விநாயகர் முன்பு வைத்து அதற்குத் தூப தீபம் காட்டி மணமக்களின் வலது கையில் கட்டிவிடுவார். மணமக்கள் மணம் முடியும்வரை தாங்கள் வேறு எந்தச் செயலும் செய்வதில்லை என உறுதி பூணுவதற்கு இஃது அடையாளமாகும். இருவரும் திருமணம் முடியும் வரை அருமைப் பெரியவர் விதிக்கும் கட்டுப்பாட்டிற்கு அடங்கியிருப்போம் என்பதற்கு இது அடையாளமாகும்.

### பெற்றோர்க்கு பாத பூசை செய்தல்

மணமகனும், மணமகளும் பெற்றோர்க்கு பாத பூசை செய்கின்றனர்.

### அவைவோர் ஆசி

மணமக்களின் முன் மஞ்சளில் செய்யப்பட்ட விநாயகரும், தட்டு ஒன்றில் பழம், தேங்காய், எலுமிச்சை, மஞ்சள் வெற்றிலை பாக்கு ஆகியவற்றின் மேலே திருமாங்கல்யமும்

வைக்கப்பட்டிருக்கும். அருமைக்காரர் மஞ்சள் பிள்ளையாருக்கும், மாங்கல்யத்திற்கும் பூசை செய்து தீபாராதனை காட்டுவார். மாங்கல்யம் உள்ள தட்டினை குடிமகன் அவையில் உள்ளோர் முன் எடுத்து வர, அவையோர் அத்தட்டினைத் தொட்டு வணங்கி ஆசி கூறுவர். அவையோர் கையில் மஞ்சள் பூசிய அரிசியை மலருடன் கலந்து கொடுப்பர்.

**மங்கலநாண் அணிவித்தல்**

மாங்கல்யத் தட்டு அவையோரின் ஆசி பெற்று வந்ததும் அருமைக்காரர் மணமக்களை அழைத்து விநாயகரை வணங்கச் செய்து மணமகனை மேற்கு முகமாக நிறுத்தி, மணமகளைக் கிழக்கு முகமாக நிறுத்தி மாங்கல்யத்தை மணமகன் கையில் கொடுத்து அதனை மணமகள் கழுத்தில் அணியச் சொல்வார். மணமகன் மணமகள் கழுத்தில் தாலியை அணிவிக்கும் பொழுது எல்லா இசைக்கருவிகளும் சேர்ந்து முழங்கும், இதனைக் கெட்டி மேளம் அல்லது சகல வாத்தியம் என்பர். அவையோர் தம் கையில் உள்ள அரிசியை (அட்சதையை) மணமக்கள் மீது தூவி வாழ்த்துவார்கள்.

**கைக்கோர்வை**

கைக்கோர்வை அல்லது கையரிசி பிடித்தல் என்பது மங்கல வாழ்த்துப் பாடும்போது நடைபெறுவது. மணமகளின் சகோதரனை மேடைக்கு அழைத்து வந்து மணமகன் முன்பு அமரச் செய்வர். இருவருக்கும் இடையே முக்காலி மேல் வைக்கப்பட்டிருக்கும் அரிசித் தட்டில் இருவர் கை விரல்களையும் கோர்வை செய்து தட்டிலுள்ள அரிசியை அணைத்துப் பிடிக்கச் செய்வர்.

மணமகனும், மைத்துனனும் கைகோர்த்திருக்கக் குடிமகன் மங்கல வாழ்த்துப் பாடுவான். இந்நிகழ்ச்சி இப்போதிலிருந்து இருவர் குடும்பமும் பாசப் பிடிப்புப் பெறுகிறது என்பதைக் காட்டுகிறது. கூட்டுறவுக்கு இன்றும் கை இணைப்பைத்தான் சின்னமாகக் காட்டுகிறோம்.

இந்நிகழ்ச்சிவரை மணமகனின் அக்காள் அல்லது தங்கை கணவர் மாப்பிள்ளைத் தோழனாக இருப்பார். கைக்கோர்வை செய்ததும் மணமகளின் உடன்பிறந்தானான கைக்கோர்வையாளன் மாப்பிள்ளைத் தோழன் ஆகிறான்.

**மங்கல வாழ்த்து**

மணமக்கள் மாலை மாற்றிக்கொண்ட பின் அருமைக்காரர் வெற்றிலையில் அரிசியை எடுத்து மங்கல வாழ்த்துப் பாடலைக் கூறி வாழ்த்துகிறார். மங்கல வாழ்த்து ஒரு தனித்த இசையில் பாடப்படும். ஒன்றிரண்டு அகவலடிகளில் பொருள் முடியுமாறு உள்ள இடத்தில் சற்று நிறுத்தி, தன் கையிலுள்ள அரிசியில் விரற்பிடி அளவு எடுத்துக் கைக்கோர்வையுள்ள தட்டின் மீது இடுவார். அப்போது மத்தளக்காரர் மட்டும் ஒரு

தட்டுத்தட்டி ஒலி எழுப்புவார். தொடர்ந்து இதேபோல் பாடல் முழுவதும் பாடி முடிக்கப்படும்.

**அருகு மணம் எடுத்தல்**

மங்கல வாழ்த்து நிறைந்ததும் அருமைக்காரர் அருகுமணம் செய்வார்.மஞ்சள், சுண்ணாம்பு கலந்த நீரில் மிதக்கவிட்ட வெற்றிலையைக் கிள்ளி மணமக்களின் அடி முதல் முடி வரை தொட்டு, தலையைச் சுற்றி எறிவார். அருமைப் பெரியோர் வாழ்த்தும் அருமை மணம் இது. அருமை மணம் என்பதே அருகு மணம் எனப்பட்டது.

**நலங்கிடல்**

வெற்றிலையில் குங்குமத்தை வைத்துச் சிறிது நீரை விட்டுக் குழைத்து மணமகன் தன் விரலால் தொட்டு பெண்ணுக்குப் பொட்டு வைப்பார். பொட்டு வைக்கும்போது நேரே நெற்றியில் வைக்காது கழுத்தைச் சுற்றிக் கையைக் கொணர்ந்து நெற்றியில் வைக்கச் சொல்வர்.

பிறகு அருமைக்காரர் சடங்கின் தொடக்கத்தில் தான் கட்டிய கங்கணத்தை அகற்றி மணமக்களின் சுட்டு விரலைத் தூய்மை செய்து இணைத்து, பட்டாடையால மூடி, மணவறையை வலம் வரச்செய்து, மணமகளையும், மணமகனையும் அறைக்கு அனுப்பி வைப்பர்.

**மணமக்களுக்கு வாழ்த்து**

மணவிழாவிற்கு வந்துள்ள நெருங்கிய உறவினர்களும், நண்பர்களும் மணமேடைக்குச் சென்று மணமக்களுக்கு வாழ்த்து கூறுவர்.

**மதிய விருந்து**

அனைவருக்கும் மதிய விருந்து அளிக்கப்படுகிறது. மாப்பிள்ளை வீட்டார் சார்பில் ஒரு பையில், தேங்காய், வெற்றிலைப் பாக்கு, குங்குமம், போட்டு, திருமணத்தில் கலந்து கொண்டு திரும்பும்போது அனைவருக்கும் கொடுக்கப்படுகிறது. ஆன்மீகம் அல்லது வாழ்வியல் குறித்த புத்தகங்கள், செடிகள், இனிப்பு வகைகள் முதலானவற்றையும் பையில் போட்டுத் தருவதும் உண்டு.

**குலதெய்வக் கோயில் புறப்பாடு**

மணமக்கள் குலக் கோயில்களுக்கும், இஷ்ட தெய்வத் தலங்களுக்கும் சென்று வணங்குகிறார்கள்.

**மணமகன் வீடு அடைதல்**

கோயிலிருந்து நேராக மணமகன் இல்லத்திற்கு வந்து சேர்வதுடன் மணவிழா நிகழ்ச்சிகள் நிறைவடைகின்றன.

❖❖❖❖❖

## ஆன்மிகம்

**பூஜைக்கு உரிய மலர்கள்**

இறைவன் பூமியின் மீது படைத்துள்ள அத்தனைப் பொருட்களும் அவனுக்கு உரியன. அதில் மலர்களும் அடங்கும். ஆயினும் எல்லா மலர்களும் எல்லா நேரங்களிலும் எல்லா இடத்திலும் கிடைப்பது கடினம். ஆகையால் கிடைக்கும் மலர்களையும் அதன் தன்மையையும் பயனையும் உணர்ந்து மனநிறைவோடு, மனப்பூர்வமாகப் பயன்படுத்தி பூஜை செய்தால் எதிர்பார்க்கும் பலன் கிடைக்க திருப்தி உண்டாகும்.

செந்தாமரை - செல்வம், தொழிலில் மேன்மை, ஆத்ம பலன், சூரியன் அருள்.

வெண்தாமரை - வெள்ளை நந்தியாவட்டை, மல்லிகை, இருவாட்சி போன்ற வெள்ளை மலர்கள் மனக்குறையைப் போக்கும், மனதில் தைரியம் சேர்க்கும்.

தங்க அரளிமலர்கள் பெண்களுக்கு மாங்கல்ய பிராப்தி உண்டாக்கும். கடன் ஏற்படாது தடுக்கும். கிரகபீடை நீக்கும். குரு பார்வை அருளும்.

சிவப்பு அரளி, செம்பருத்தி - வாட்டும் கவலை அகற்றி குடும்ப ஒற்றுமை பெருக்கும்.

நீல சங்கு புஷ்பம், நிலாம்பரம், நீலோற்பகம் ஆகியவை அவப்பெயரைப் போக்கும், தரித்திரம் நீக்கும். மன அமைதி தரும். சனி பகவானின் அருளையும் பெற்றுத்தரும் ஆயுளைப்பெருக்கும்.

மனோரஞ்சிதம்–குடும்ப ஒற்றுமையை வலுப்படுத்தி, கணவன் மனைவிக்குள் அன்பையும் பெருக்கும்.

பாரிஜாதம், அல்லிப்பூ போன்ற சற்று மங்கலான வெள்ளை புஷ்பங்கள் சந்திரன் அருளைப் பெற்று புத்தி வலிமையைப் பெருக்கும். தாயாரின் உடல் நலத்தையுக் காப்பாற்றும், பாசிப்பச்சை, மருக்கொழுந்து மருவு போன்றவை அறிவைப் பெருக்கி மன உறுதியைத் தரும், புதனுடைய நற்பார்வை அருளும். அடுக்கு அரளி, செம்பருத்தி ஞானம், கல்வி, தொழில் பெருகும். வில்வ புஷ்பம், கருந்துளசி புஷ்பம், மகிழ மலர் ஆகியவை ராகு, கேது ஆகிய கிரகங்களின் நற்பலனைத் தரும்.

பழைய புஷ்பங்களையும், மொட்டுக்களையும், தூய்மை இல்லாத புஷ்பங்களையும் இறைவனுக்குச் சார்த்தக்கூடாது. வினாயகப் பெருமானுக்கு எருக்கம்பூ, தும்பை, செம்பருத்தி, தாமரை, ரோஜா ஆகிய மலர்கள் பூஜைக்கு உகந்தவை.

திருமாலுக்குத் தாமரை, பவளமல்லி, மருக்கொழுந்து, துளசி, சாமந்தி ஆகியவை உகந்தவை. நீலசங்க புஷ்பம் பயன்படுத்தலாம். வரலட்சுமிக்கு மடலவிழ்ந்த தாழை மடல் மிகவும் சிறந்தது.

❖❖❖❖❖

# முன்னேற்றமே மூச்சுக்காற்று

- சிந்தனை கவிஞர் கவிதாசன்

**நேரமே வாழ்க்கை**

நேரமே வாழ்க்கை. வாழ்க்கை என்பது மணித்துளிகளின் தொகுப்பு.

பணத்தை விரயம் செய்பவர்கள் செல்வத்தை மட்டுமே இழக்கிறார்கள். ஆனால் நேரத்தை விரயம் செய்கிறவர்கள் வாழ்க்கையை இழக்கிறார்கள்.

மேலும் பணி நேரத்தை விரயம் செய்கிறவர்கள் முன்னேற்றத்தை இழக்கிறார்கள்.

ஒவ்வொரு நிமிடத்தையும் உழைப்பில் முதலீடு செய்கிறவர்கள் மட்டுமே முன்னேற்றப் பாதையில் செல்கிறார்கள். மற்றவர்கள் பின்தங்கி விடுகிறார்கள்.

உங்கள் முன்னேற்றம், உங்கள் நேரத்தை நீங்கள் எவ்வாறு செலவு செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே அமைகிறது.

**பணி நேரம்**

உங்களின் பணி நேரம் உங்களுடையது அல்ல. அது உங்களுக்கு வேலை அளிப்பவருக்குச் சொந்தமான நேரம்.

ஆகவே பணி நேரத்தை விரயம் செய்வதற்கு உங்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை.

**வேலைப்பட்டியல்**

நேரத்தை முழுமையாக உபயோகமான வழியில் செலவு செய்வதற்கு, ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய வேலைகளின் பட்டியலைத் தயார் செய்து கொள்ளுங்கள்.

எதைச் செய்வது என்ற தெளிவில்லாதபோது முக்கியமில்லாத பணிகளில் உங்கள் நேரத்தை விரயம் செய்துவிட்டு முக்கியமான பணிகளைச் செய்யாமல் விட்டுவிட நேர்ந்தால், மேலதிகாரிகளின் பாராட்டுதலை எவ்வாறு பெற முடியும்?

ஆகவே ஒவ்வொரு நாளும் நீங்கள் பணிக்கு வரும்போது அன்றைய தினம் நீங்கள் என்னவென்ன வேலையைச் செய்யப் போகிறீர்கள் என்ற செயல் திட்டத்தோடுதான் தொழிற்சாலைக்கு அல்லது அலுவலகத்திற்கு வரவேண்டும்.

மேலும், நீங்கள் நாலு பேரிடம் வேலை வாங்குபவராக இருந்தால், அந்த நாலு பேருக்கு என்னென்ன வேலையை ஏற்கெனவே கொடுத்துள்ளீர்கள் என்பதைப் பற்றியும், என்னென்ன வேலைகளைப் புதிதாகக் கொடுக்கப்போகிறீர்கள் என்பதைப் பற்றியும் சிந்தித்து அதற்கான பட்டியலோடு வாருங்கள்.

அப்பொழுதுதான் ஒவ்வொரு நாளும் செயல்திறன் மிக்க நாளாக விளங்கும்.

**பயணத்தைத் குறையுங்கள்.**

மிகவும் அவசியம் என்ற நிலையில் மட்டுமே நீங்கள் பணி நிமித்தமாகப் பயணத்தை மேற்கொள்ளுங்கள். பயணத்தில் நேரத்தை வீணாக்காதீர்கள்.

அவ்வாறு முக்கியமாகப் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையிலும், நீங்கள் யாரைச் சந்திக்க வேண்டுமோ, அவரிடம் முன்கூட்டியே நேர ஒதுக்கீடு பெற்றுச்செல்லுங்கள். அப்பொழுதுதான் வீண் அலைச்சலையும் நேர விரயத்தையும் தவிர்க்க முடியும்.

மேலும் ஒரு காரியத்தைத் தொலைபேசி மூலமாகவோ கடிதம் மூலமாகவோ முடிப்பதற்கு முயலுங்கள்.

நேரில்தான் சென்று அக்காரியத்தை முடிக்க வேண்டும் என்ற நிர்பந்தத்திலும், வேறு யாராவது ஒருவரை அனுப்ப முடியுமா என்றும், வேறு ஏதாவது வேலைகளை அப்பயணத்தின் போதே முடிக்க முடியுமா என்றும் சிந்தித்துப் பாருங்கள்.

நேரத்தை எவ்வளவுக்கெவ்வளவு பயனுள்ளதாக மாற்றுகிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு உங்கள் வாழ்க்கை பயனுடையதாக மாறுகிறது.

நேரமே வாழ்க்கை என்பதை எந்த நிலையிலும் மறந்து விடாதீர்கள்.

**பயண நேரத்தைப் பயன்படுத்துங்கள்**

நீங்கள் பயணத்தை மேற்கொண்டாக வேண்டியபோது, நீங்கள் எதில் பயணம் செல்கிறீர்கள் என்பதைப் பொறுத்துப் பயண நேரத்தைப் பயனுள்ளதாக்க வழியில் கோப்புகள், ஆவணங்கள் போன்றவற்றைப் பார்வையிடுதல், முன்னேற்ற நூல்களைப் படித்தல், திட்டமிடுதல், ஆவணங்களை வரைவு செய்தல் போன்றவற்றை செய்யவும் முயலுங்கள்.

அவ்வாறு எழுதவோ, படிக்கவோ முடியாதபோது எதிர்காலத்தில் நீங்கள் என்னென்ன செய்ய விரும்புகிறீர்கள் என்பது குறித்துச் சிந்தித்துக் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்.

குறிப்பாக, நீங்கள் செய்கிற வேலையை இன்னும் சிறப்பாகவும், சிக்கனமாகவும், எளிமையாகவும் எப்படிச் செய்வது என்பதைப் பற்றிச் சிந்தியுங்கள். அது எந்த வேலையாக இருந்தாலும், தற்போது உள்ள நிலையை விட இன்னும் சிறப்பாகச் செய்ய முடியும் (Anything can be done better than existing) என்று முதலில் நீங்கள் நம்ப வேண்டும்.

இப்படி நீங்கள் நினைத்தாலே போதும்; அதை எப்படி நிறைவேற்றுவது என்பதை உங்கள் மனது பார்த்துக்கொள்ளும்.

ஆகவே எனது வேலையில் முன்னேற்றமும் செயல்திறனும் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ண விதைகளை உங்கள் ஆழ்மனதில் போட்டு வையுங்கள்.

பிறகு பாருங்கள், உள்மனதிலும், வேலையிலும் நிகழும் அற்புதங்களை !

**நேரம் ஒதுக்குங்கள்**

நீங்கள் செய்யத் திட்டமிட்டுள்ள ஒவ்வொரு வேலைக்கும் உரிய நேரம் ஒதுக்குங்கள். நீங்கள் ஒரு தொழிலாளியாக இருந்தால் உங்கள் பணி நேரத்தில் நீங்கள் என்னென்ன பணி செய்ய வேண்டும் என்பது உங்களின் மேற்பார்வையாளர் அல்லது மேலதிகாரியால் தீர்மானிக்கப்படுகிறது.

ஆகவே உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையைக் குறிக்கப்பட்ட நேரத்திற்குள்ளாக எவ்வாறு தரத்தோடு செய்து முடிக்கிறீர்கள் என்பது மிகவும் முக்கியம்.

நீங்கள் ஓர் அலுவலகப் பணியாளராக இருந்தால் உங்கள் பணி நேரத்தில் எண்பது சதவீத நேரத்தில் என்னென்ன வேலைகள் செய்வது என்பதை நீங்கள் திட்டமிடுங்கள்.

இருபது சதவீத நேரத்தை உங்கள் மேலதிகாரியின் அவசர மற்றும் அத்தியாவசியப் பணிக்காக ஒதுக்குங்கள்.

உங்களுக்கான எண்பது சதவீத நேரத்தில் இருபது சதவீத நேரத்தை உங்கள் பணியின் எதிர்காலத்திற்காக ஒதுக்குங்கள், நாளை செய்ய வேண்டிய வேலைகளுக்கான ஆயத்தப்பணிகளை (Preparatory Works) இன்றே செய்துவைக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

நீங்கள் ஓர் அதிகாரியாக இருந்தால் உங்கள் பணி நேரத்தில் எண்பது சதவீத நேரத்தைத் திட்டமிடவும், இருபது சதவீத நேரத்தை உங்களுடன் பணிபுரிவோருக்கு உதவுவதற்கும் செலவிடுங்கள்.

**நிகழ்காலத்தில் நில்லுங்கள்**

நீங்கள் என்ன வேலை செய்கிறீர்களோ அதில் முழு மனதுடன் ஈடுபடுங்கள், சிந்தனைச் சிதறல் பல்வேறு பிரச்சனைகளை உருவாக்கும்.

எடுத்துக்கொண்ட வேலையின் மீது கவனக்குவிப்பே அதைச் சிறப்பாக முடிக்க உதவும். கடந்த காலத்தைப்பற்றிய கவலையிலும் எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கத்திலும் மூழ்காமல் நிகழ் காலத்தில் நில்லுங்கள்.

**வெற்றியின் விதைகள்**

நேற்று என்பது உடைத்த பானை

நாளை என்பது மதில் மேல் பூனை

இன்று என்பது உன் கையிலுள்ள வீணை

❖❖❖❖❖

# கொங்கு சமுதாய மாணவர்களின் கவனத்திற்கு..

- வி.கொமாரவேல், சேலம்

என்னுடைய மகன் செல்வன் கே.ஜெயசந்திரன் தற்போது சென்னை I.I.T. யில் முதலாண்டு படித்து வருகிறார். 2011 ஆம் ஆண்டு IIT, JEE தேர்வு எழுதி வெற்றி பெற்ற இவர் மகரிஷி வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளியில் CBSE பாடத் திட்டத்தில் +2 படித்தவர். FITTJEE, யில் IIT தேர்வுக்குப் பயிற்சி பெற்றார்.

இது சம்பந்தமாக நம் சமுதாய மாணவர்களின் நன்மையைக் கருதி சில கருத்துகளை வலியுறுத்த விழைகிறேன்.

1. நம்முடைய மாணவர்கள் அறிவிலும் ஆற்றலிலும், சிறந்து விளங்குகிறார்கள். ஆனால் இவற்றைப் பயன்படுத்த சரியான வாய்ப்பு கிடைப்பதில்லை.

2. நம்முடைய சமுதாயத்தினர் விவசாய வேலைகளின் உழைப்பதில் சிறந்து விளங்குகின்றனர். இந்த உழைப்பில் 10% படிப்பில் செலுத்தினால், கல்வியில் சாதனைகள் புரிய முடியும்.

3. நம் மக்கள் வாய்ப்புகள் பற்றிய தெளிவான அறிவில்லாமலும், தெரிந்துகொள்ளாமலும் இருக்கிறார்கள். BSNL ல் செயற்பொறியாளர் பதவியில் இருந்த போதிலும், நானே மேற்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் பற்றிய விவரங்கள் அறியாமலிருந்தேன் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். எனவே வாய்ப்புகள் பற்றி நமது சமுதாய மாணவர்களுக்கும், பட்டதாரிகளுக்கும் தகுதிவாய்ந்தவர்கள் மூலம் விளக்கம் தந்திட வேண்டும்.

4. கல்விக்கும், வேலைவாய்ப்புக்கும் OBC இட ஒதுக்கீடு ஒரு பெரிய வரபிரசாதம். இதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நிறைய பேர்களுக்கு இந்தச் சலுகை பற்றித் தெரியவில்லை. ரூபாய் 4.5 லட்சத்திற்கு கீழ் வருடவருமானம் உள்ளவர்களுக்கு மட்டுமே இந்தச் சலுகைஉண்டு. எனவே நம்மில் பெரும்பாலோர் நமக்கு இந்தச் சலுகை கிடையாது என்று நினைக்கிறார்கள். காரணம், ரூபாய். 4.5 இலட்சத்திற்கு மேல் வருட வருமானம் இருப்பதனால். ஆனால் இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், சம்பளமும், விவசாய வருமானமும் இதில் கணக்கில் எடுத்துக்கொள்ள கூடாது. மொத்த வருட வருமானத்திலிருந்து இந்த இரண்டையும் கழித்தபிறகு, மீத வருமானம் ரூ. 4.5 லட்சத்திற்கு உட்பட்டிருந்தால் இந்தச் சலுகையைப் பெறலாம் என்பதுதான்.

❖❖❖❖❖

## மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| ஜாதகர் பெயர் | : | வி.சுபஸ்ரீ |
| பிறந்த தேதி | : | **21–08–1976** |
| பிறந்த நேரம், இடம் | : | கோவை |
| நட்சத்திரம் | : | திருவாதிரை மிதுனராசி கன்னிலக்கினம் |
| தந்தை பெயர் | : | பி.வேலுசாமி |
| தாயார் பெயர் | : | நாயகி வேலுசாமி |
| உடன் பிறப்பு | : | **3** பெண்கள் மட்டும் திருமணம் ஆகிவிட்டது |
| கல்வி | : | B.P.T. பிஸியோதெரப்பிஸ்ட் |
| தற்போதைய இருப்பிடம் மற்றும் தொழில் | : | வெளிநாடு, கனடா நாட்டில் அரசு உத்தியோகம் |
| வருவாய் | : | மாதம் சுமார் Rs. 2,00,000/- |
| உயரம் / நிறம் | : | **5.3** அடி, நல்லசிவப்பு |
| குலம் / கோவில் | : | வரகு உண்ணாத பெருங்குடியான் கூட்டம் |
| சொத்து | : | பங்களா, பூமி, பேக்டரி |
| எதிர்பார்ப்பு | : | ஜாதகர் திருமணமாகி ஒரு வருடத்திலேயே மண முறிவு ஆனவர். தற்பொழுது கனடா நாட்டு, குடிஉரிமையும் பெற்றுள்ளார். வெளிநாட்டில், குறிப்பாக அமெரிக்கா, கனடா ஆகியவற்றில் வாழும், படித்து வேலையில் உள்ள திருமணமாகாத அல்லது மணமுறிவு ஏற்பட்ட வரன்கள் மட்டும் தேவை. |

தொடர்புக்கு :-

94863 53413, 89250 78830, 99761 09586

❖❖❖❖❖

## விடியற்காலை எழுவதால் கிடைக்கும் பலன்கள்

காலை **4.00** மணி முதல் **5.00** மணி வரை பிரம்ம முகூர்த்தம் என்று பெயர். அப்பொழுது விழித்துக் கொண்டு படுக்கையை விட்டு எழுந்திருக்க வேண்டும். முதலில் சிரமமாக இருந்தாலும் பிறகு பழக்கமாகிவிடும். இப்படிச் செய்வது ஆரோக்கியம், நீண்ட ஆயுள் முதலிய பலன்களைக் கொடுக்கும்.

❖❖❖❖❖

## மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| ஜாதகர் பெயர் | : | பா.கிருதி |
| பிறந்த தேதி | : | 02-06-1972 வெள்ளிக்கிழமை 3.00 a.m. ஈரோடு |
| நட்சத்திரம் | : | திருவோணம், மகர ராசி |
| கல்வி | : | MBA., ML. |
| தொழில் | : | அரசுடைமையாக்கப்பட்ட வங்கியில் மேலாளர் |
| உயரம், நிறம் | : | 160 cms, நல்ல சிவப்பு |
| குலம், கோயில் | : | கண்ணன், காளமங்கலம் குலவிளக்கு அம்மன் |
| தொடர்பு | : | 9445656856 |
| எதிர்பார்ப்பு | : | படித்த வேலையில் அல்லது சொந்தத் தொழில் |

## மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| ஜாதகர் பெயர் | : | மு.பிரியா |
| பிறந்த தேதி | : | 23-10-1988 ஞாயிறு 4.50 a.m. ஈரோடு |
| நட்சத்திரம் | : | உத்திரட்டாதி 1ம் பாதம், மீனராசி, கன்னி லக்கினம் |
| தந்தை / தாய் பெயர் | : | K.முருகேசன், ராஜாமணி முருகேசன் |
| முகவரி | : | எண்.6, இராஜசார் தெரு, தி.நகர், சென்னை - 17. |
| கல்வி | : | M.Com., |
| தொழில் | : | Accountant, Chennai |
| கூட்டம் | : | காடை |
| எதிர்பார்ப்பு | : | சொந்த தொழில் அல்லது வேலை |
| செவ்வாய் இருப்பிடம் | : | 4ல் செவ்வாய் |
| தொடர்புக்கு | : | 98400 50009,98400 33888 |

❖❖❖❖❖

# மணமகள் தேவை

| | |
|---|---|
| ஜாதகர் பெயர் | : பி.கோகுலகிருஷ்ணன் |
| பிறந்த தேதி | : 22–09–1981 செவ்வாய் |
| பிறந்த நேரம், இடம் | : 14.19 IST, ஈரோடு |
| நட்சத்திரம் | : புணர் பூசம் (பாதம் 2), ராசி : மிதுனம், லக்கனம் : மகரம் |
| தந்தை பெயர் | : கே.என்.பாலசுப்பிரமணியன் |
| தாயார் பெயர் | : திலகவதி |
| தந்தை தொழில் | : Textile Export Business |
| உடன் பிறப்பு | : 1 அக்கா டாக்டர், ஆஸ்திரேலியா, திருமணமானவர்; மாப்பிள்ளை – டாக்டர் |
| கல்வி | : M.Sc., International Business, London, (UK), MA., (Marketing) (UK) |
| தொழில் | : Own Textile Export Business, Karur |
| வருவாய் | : மாதம் சுமார் Rs. 1,00,000/- |
| உயரம் / நிறம் | : 5.6 அடி, நல்லசிவப்பு |
| குலம் / கோவில் | : புலியூர் பெருங்குடி குலம், புலியூர் ஸ்ரீ முச்சிலியம்மன், ஸ்ரீ காளியம்மன் |
| சொத்து | : பங்களா, பூமி, வங்கி வைப்பு நிதி – முதலியன ரூ. 10 கோடி |
| எதிர்பார்ப்பு | : நல்ல பாரம்பரியமான குடும்பப் பின்னணி, நன்கு படித்த குணவதியான குடும்பப் பாங்கான பெண். |

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | இராசி | | செ ரா |
| லக் கே | | | |
| | | புத சுக் | சூரி குரு, சனி |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | சந் | சனி |
| சூரி கே | நவாம்சம் | | குரு |
| லக் | | | ரா |
| செ | | புத | |

தொடர்புக்கு :
தந்தை கே.என்.பாலசுப்பிரமணியன் செல் : 98430 79736
தாய் : திலகவதி செல் : 9047034549

❖❖❖❖❖